இலங்கை கைப்பணிகள் சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கைப்பணிகள் சபையின் ("சபை") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 28 மற்றும் 34 ஆம் பந்திகளின் பிரகாரம், ஏதேனும் ஒரு சரக்கிருப்பின் கிரயம் மீண்டும் அறவிட முடியாததாக நிலைமைக்கு உட்பட்டிருந்தால், அத்தகைய சரக்கிருப்பின் கிரயம், தேறிய நிகர பெறுமதி வரை பதிவழிக்க வேண்டியதுடன் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ஆண்டின்	சேதமடைந்த சரக்கிருப்பு தொடர்பாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சரக்கிருப்பின் கிரயத்தை மீண்டும் அறவிட முடியாததாக நிலைமைக்கு உட்பட்டிருந்தால், கிரயம், தேறிய நிகர பெறுமதி வரை பதிவழிக்க

	செலவினமொன்றாக கருத வேண்டும் இருப்பினும், மீளாய்வாண்டின் பௌதீக சரக்கிருப்பு சரிபார்ப்பின் போது அடையாளம் காணப்பட்ட ரூபா. 877,957 பெறுமதியான சேதமடைந்த சரக்கிருப்பு தொடர்பாக மேற்கூறிய நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		வேண்டியதுடன் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ஆண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	முன்னைய காலப் பிழைகளைத் திருத்தும் போது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 42 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் பிழை நிகழ்ந்த காலத்திற்கான சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்பட வேண்டிய போதிலும் சபையால் முன்னைய காலப்பகுதிக்குரிய மொத்தம் ரூபா 70,721,246 ஆன 92 பிழைகளை உள்ளடக்கி, ஒப்பீட்டுப் பெறுமதிகளை மீண்டும் வெளியிடாமல் இருந்ததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக் களிலும் வெளியிடப் பட்டிருக்கவில்லை.	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் முன்னைய காலப்பகுதிக்கான தவறுகள் சரி செய்யப்படும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடுவதற்கு 2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் முன்னைய காலப்பகுதிக்கான தவறுகள் சரி செய்யப்படும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்பட வேண்டியதுடன் தொடர்பாக நிதிக்கூற்றுக் களிலும் வெளியிடப் பட வேண்டும்.
(இ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 50 மற்றும் 51 இன் பிரகாரம் பயன்பாட்டில் உள்ள சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு, அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட, தொடர்ந்தும் பயன்பாட்டில் இருந்த ரூபா. 181,980,913 கிரயமான சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	தேய்மானம் செய்யப்பட்டு முடிவடைந்த ஆதனங்களுக்காக விடய அறிவுடைய சபையொன்று மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பயன்பாட்டில் உள்ள சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு, அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 56,442,498 ஆன பணிக்கொடை ஏற்பாடுகள் தொடர்பான சேவைக்கு பின்னைய நலன் கடப்பாடு மற்றும் தொடர்பான சேவைச் கிரயத்தின் தற்போதைய பெறுமதியினை கணக்கு களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை.	அச்சேவையை வழங்கும் நிறுவனமொன்றை தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் இச்செயற்பாட்டை மேற்கொண்டு பணிப்பாளர் சபை பரிந்துரையொன்று பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீட்டின் போது சேவைக்கு பின்னைய நலன் கடப்பாடு மற்றும் தொடர்பான சேவைச் கிரயத்தின் தற்போதைய பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும்

(உ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் ஏனைய சலுகைகளை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என்ற போதிலும், நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ பதவியணியினரிடையே அந்தத் தகவலை தொடர்புடைய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல நடைபெறவில்லை என்பதையோ நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தவில்லை	நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை மேறகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பிரதான முகாமைத்துவு பதவியணிக்கு வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் ஏனைய படிகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் SAP முறைமையில் உள்ள பிழைகளைத் தீர்வு செய்வதற்காக, மீளாய்வாண்டில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 550,000 தொகை கணக்கடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 இன் கணக்குகளில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஆண்டு தொடர்பான அனைத்துச் செலவினங்களும் கண்டறியப்பட்டு, கணக்கடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில், ரூபா. 12,333,493 (பெறுமதி சேர் வரி நீங்கலாக) ஆன 53 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கட்டளைகளின் விற்பனை தொடர்பான ரூபா. 770,745 ஆன பெறுமதி சேர் அடிப்படையிலான வரி, விற்பனை வருமானத்திற்கு கொண்டு வந்திருந்தமையால் விற்பனை வருமானம் அந்த அளவினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ளது.	53 கட்டளைகளுக்குரிய VAT பட்டியல் வழங்கப் பட்டுள்ளதால், VAT பெறுமதி முன்னைய ஆண்டின் சீராக்கமாகத் திருத்தப்படும்.	அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கின் மூலம் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் ரூபா 4,898,485 தொகையான லக்சல வளாகத்தின் விற்பனை தொடர்பான இருப்பின் பெறுமதி இறுதி இருப்பிலிருந்து கழிக்கப்படாத காரணத்தால், மீளாய் வாண்டிற்கான சொத்துக் களும் இலாபமும் சமமான அளவில் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இது 2025 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும்.	விற்பனை தொடர்பான இருப்பு பெறுமதி இறுதி இருப்பிலிருந்து கழிக்கப்பட்டு, தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும்.

(ஈ)	முறைமை செயலிழந்திருந்த தால், 2024 மார்ச் முதல் செய்யப்பட்ட விற்பனைகள் கைப்பணிகள் முறைமையில் முறையாக உள்ளிடப்பட்டிருந்ததுடன் அங்கு ஒவ்வொரு நிலையத்தின் விற்பனைகள் மற்றும் முறைமையில் பதிவு செய்யப்பட்ட விற்பனைக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. அந்த வேறுபாடான ரூபா. 188,361,518 என முறைமையில் விற்பனையாக உள்ளிடப்பட்டிருந்தாலும், தொடர்புடைய மூல ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. \	2025 ஆம் ஆண்டு முதல், இதுபோன்ற சரிசெய்தல்கள் செய்யப்படும் போது, அத்தகைய தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	முறைமையில் உள்ளிடப்பட்ட விற்பனை பெறுமதிப்புக்கும் உள்ளவாறான விற்பனை பெறுமதிக்கும் உள்ள வேறுபாடு ஒப்பிடப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். அனைத்து கொடுக்கல் வாங்கல்ளும் தொடர்புடைய மூல ஆவணங்களைக் கொண்டு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(உ)	இருப்பு மற்றும் ஆண்டிற்கான கொள்வனவு சீராக்கம் செய்யும் போது மீளாய்வாண்டிற்குரிய விற்பனைக் கிரயம ரூபா. 402,421,619 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின் படி அது ரூபா. 389,142,013 ஆக இருந்தது. எனவே, ரூபா. 13,279,606 வித்தியாசம் இருந்ததுடன், அந்த வித்தியாசத்திற்கு எந்தச் சீராக்கமும் செய்யப்படவில்லை.	எதிர்காலத்தில் இதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	விற்பனைக் கிரயத்தில் உள்ள வித்தியாசம் சரிசெய்யப்பட்டுத் திருத்தப்பட வேண்டியதுடன், மேலும்இருப்பு மற்றும் கொள்வனவுகள் சரியாகச் சீராக்கம செய்யப்பட்டு விற்பனைக் கிரயம் கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதி ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 6,936,088 ஆக இருந்த வியாபார கடன்பட்டோர் மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,963,011 கடன்பட்டோர் மீதியைத் தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இக்கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக ஆராய்ந்து அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அறவிட முடியாத மீதிகளுக்காக அறவிட முடியாக்கடன் ஒதுக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.	கடன்பட்டோர் மீதிகளை விரைவாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அறவீடுகள் நிச்சயமற்ற நிலுவைகள் துல்லியமாக அடையாளம் காணப்பட்டு, ஐயக்கடன்களுக்காக ஒரு ஒதுக்கீடு

			செய்யப்பட வேண்டும்.
(ஆ)	கட்டுபெத்த திட்டம் நிறைவடைந்திருந்த போதிலும், 2014 – 2018 காலக்கட்டத்தில் 8 அரச நிறுவனங்களுக்குச் விசேட கட்டளைகளின் பேரில் செய்யப்பட்ட விற்பனைகளிலிருந்து, 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 1,182,387 தொகை சபைக்கு அறவிட வேண்டியிருந்தது. இதில், ரூபா. 720,474 தொகையை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் விசேட நிதி ஏற்பாடுகளின் கீழ் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி அது பதிவழிக்கப்பட்டிருந்தது. கடன் மீதிகளை அறவிடும் செயல்முறையிலும், கடன்பட்டோர் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட தாமதம் காரணமாக, இந்த நீண்டகாலக் கடன் மீதிகள் தொடர்ந்து அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய ரூபா 9,578,372 கூட்டுத்தொகையான கடன் பட்டோர் மீதிகள் அறவிட முடியாத கடன்பட்டோர் மீதிகளாக வியாபார கடன்பட்டோர் மீதிகளாக கழிக்கப்பட்டு, கணக்குகளில் தொடர்ந்து காட்டப்பட்டு வந்தது.	இந்த கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக ஆராய்ந்து அறவிடக் கூடிய தொகைகளை அறவிடுவதற்கும் மிகவும் பழைய மீதிகள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைத் தொகைகளை வசூலிக்க, சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். அறவிடக் கூடிய கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.
(இ)	தேசிய நூதனசாலை வளாகத்தில் கட்டப்பட்டிருந்த, 2023 திசெம்பர் 31 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் அபிவிருத்தி செய்வதற்காக சபையால் செலவிடப்பட்ட மொத்தத் தொகையான ரூபா. 70,864,399 (காலக்கழிவிற்குப் பின்னர்) 2025 அக்டோபர் 16 வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நூதனசாலை திணைக்களத்தினால் ரூபா 70.8 மில்லியனுக்காக சபைக்கு ரூபா 7.5 மில்லியனை வழங்க முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த துடன் அந்தத் தொகை போதுமானதாக இல்லாததால், தொடர்ந்தும் கலந்துஜரயாடல்கள் நடைபெற்று வருகின்றன.	சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	லங்கா சலுசல கம்பனிக்கு சொந்தமான காலி உணவட்டுனவில் அமைந்துள்ள	லங்கா சலுசல கம்பனிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன்	சபை செலவிடப்பட்ட பணத்தை விரைவில் அறவிடுவதற்கு

	காணியை சபைக்கு கையேற்பதற்காக 2012 திசெம்பர் 12 ஆந் திகதி ரூபா 15,248,575 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் சலுசல கம்பனியினால் அந்த ஆதனத்தை இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு 2023 செப்தம்பர் 22 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டிருந்தது. சபையால் கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை மீளாய்வாண்டின் இறுததி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அப்பணத்தை உடனடியாக செலுத்தி முடிப்பதாக அமைச்சின் கணக்காய்வு குழுவின் போது இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தது.	நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	கொள்வனவு, நிர்வாகம், சந்தைப்படுத்தல் மற்றும் கட்டுபெத்த திட்டத்திற்காக வழங்கப்பட்ட முன்பணங்களில், 2024 திசெம்பர் 31, இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத ரூபா 10,981,969 கூட்டுத்தொகையான 10 முன்பண மீதிகள் தொடர்பான சான்றுகள் சபையிடம் காணப்படவில்லை.	இவை கொடுக்கல் வாங்கல்கள் என்பதால், வரும் ஆண்டுகளில் இவற்றை விசாரித்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	வழங்கப்பட்ட இந்த முற்பணங்கள் தொடர்பான சான்றுகளை கண்டுபிடித்துத் தீர்வு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முன்பணங்களைச் தீர்வு செய்யாததற்குப் பொறுப்பான அதிகாரிகள் கண்டறியப்பட்டால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக 2013 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய ரூபா. 6,939,703 பெறுமதியான 05 மீதிகளும், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பல்வேறு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான செலுத்த வேண்டிய ரூபா. 8,538,309 பெறுமதியான 14 மீதிகளும், 2011 முதல் 2022 வரை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குச் செலுத்த	கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக ஆராய்ந்து இதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால் சீராக்கவுதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்தி விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வேண்டிய ரூபா. 10,029,134 ஆன கணக்காய்வுக் கட்டணமும் தீர்க்கப்படாமல் இருந்தன.		
(ஆ)	2023 மே முதல் பிடித்து வைக்கப்பட்ட உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரி ரூபா. 581,352 தொகையும் 2017 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் அலுவல் ரீதியான கொடுப்பனவுகளில் இருந்து பிடித்து வைக்கப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா. 1,494,183 வரியையும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.	பிடித்து வைக்கப்பட்ட இந்த வரிகள், நிறுவனத்தின் நிதி நிலைமையின் அடிப்படையில் தவணைகளில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய வரித்தொகையை தாமதமின்றி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும்.
(இ)	வருடக் கணக்காக இருந்து வரும் ரூபா. 63,173,745 ஆன வருமான வரி ரூபா. 2,728,764, ஆன பெறுமதி சேர்வரி ரூபா 25,645,319 தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் ரூபா. 4,303,359 ஆன பொருளாதார சேவைக் கட்டணங்கள் என கொடுப்பனவு செய்யப்படாத வரி மீதிகள் மீளாய்வாண்டிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த வரித் தொகைகள் நிதி நிலைமையின் அடிப்படையில் பணம் செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.	செலுத்த வேண்டிய வரிகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தாமதமின்றி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி சட்டம்	சுய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த வரித் தொகைஐ உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 11,320,094 தொகையை அவ்வாறு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் கணக்காண்டுகளில் இப்பணத்தை தாமதமின்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்தின் பிரகாரம் செலுத் வேண்டிய வரித்தொகையை உரிய திகதியில் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின்	சம்பந்தப்பட்ட பணி முடிந்தவுடன் முன்பணம் உடனடியாக தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2021-2024	இந்த முற்பணங்கள் 2025 ஆம் ஆண்டில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி, தொடர்புபட்ட பணி முடிந்தவுடன் முற்பணம்

	9.1 (ஆ) பிரிவு மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)	காலப்பகுதியில் 16 உத்தியோகத்தர்களால் 41 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா. 1,780,458 முற்பணத் தொகையினை 2025 ஒக்தோபர் 10 இற்குள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	எடுக்கப்படும்.	உடனடியாக தீர்வு செய்யப்பட வேண்டும், அதற்காக ஒரு அவசியமான கட்டுப்பாட்டு செயல்முறை நிறுவப்பட வேண்டும். முற்பண தீர்வினை தாமதமாக்கிய உத்தியோகத்தர் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப் பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின்			
(i)	3.2 ஆம் பிரிவு	மீளாய்வாண்டில் ஊக்குவிப்பு தொகையாக ரூபா. 7,960,888 மற்றும் மருத்துவச் செலவினமாக ரூபா. 2,035,580 வழங்கப்பட்டிருந்த போதிலும், இதற்கான திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை.	பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு உட்பட்டு இக் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.	இதுபோன்ற விசேட படிகளுக்கான கொடுப்பனவுகள், திறைசேரியின் அங்கீகாரம் பெற்ற பின்னரே வழங்கப்பட வேண்டும்.
(ii)	6.6 ஆம் பிரிவு	2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 09 மாதங்கள் தாமதம் ஆகி 2025 ஒக்தோபர் 02 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைவு ஆண்டறிக்கை 2026 மார்ச் 31 வரை திகதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் கணக்காண்டின் போது அரசிற்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயற்பர்’டுக் கோவையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2018 செப்டம்பர் 18 ஆந் திகதிய PED 01/2018 ஆம் இலக்க திறைசேரிச்	3000 CC இற்கு மிகைகாத எஞ்சின் இயலளவினைக் கொண்ட இரட்டை கெப் வாகனத்தை செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ்	சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விலை விபரங்களும் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, சொத்துக்கள் சிக்கனமான

செயலாளரின் சுற்றறிக்கையின் பிரிவு 4(C). i	மாதம் ரூபா. 1,65,000 (பெறுமதி வரி உட்பட) கொடுப்பனவு அடிப்படையில் பெற முடியுமாக இருந்த போதிலும், இதற்கு மாறாக, 2024 ஜனவரி 02 ஆந் திகதிய PED/S/SLHB/5/7 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பேரில் ஒரு CHR கெப் வண்டியொன்று மாதம் ரூபா. 3,50,000 தொகைக்கு செயற்பாட்டு குத்தகைத் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.	மீறியுள்ளதால் அது தொடர்பான வரிசை அமைச்சு மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு (PED) தெரிவித்து அறிவுறுத்தல்களின் படி செயற்படுவது பொருத்தமானது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.	முறையில் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 25,086,792 இலாபமாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 57,120,290 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 32,033,498 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானமானது ரூபா 261,641,584 ஆல் அதிகரித்தமை, நிர்வாக செலவினம் ரூபா 44,413,104 ஆல்,விற்பனை செலவினம் ரூபா 96,770,600 ஆல், நிதி செலவினம் ரூபா 1,832,284 ஆல் மற்றும் விற்பனை கிரயம் ரூபா 143,315,756 ஆல் அதிகரித்தமையே இவ் நிதி விளைவுகளின் பின்னடைவிற்கு பிரதான காரணமாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள், நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் விதிகளுக்கு அப்பால் செயல்பட்டு, இலங்கை கைவினைப் பொருட்கள் சபைக்குப் நிதி இழப்பை ஏற்படுத்தியதன் காரணமாக இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தனர். அதன் போது தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவின் படி ஒழுக்காற்று உத்தியோகத்தரால் ஒழுக்காற்று கட்டளை வழங்காமை ஒழுங்குமுறை உத்தரவைப் பிறப்பிக்கத் தவறியதாலும்,	சம்பந்தப்பட்ட இரண்டு அதிகாரிகளின் முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கைகள் சபைக்கு பெறப்பட்ட பின்னர், அவை பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் மீதான ஒழுங்குமுறை உத்தரவுகள் குறித்து எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை என்பது பணிப்பாளர் சபையின் முடிவுகளிலிருந்து தெரியவருகிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சபைக்கு ஏற்பட்ட நிதி இழப்புகளை மீட்கத் தவறிய பணிப்பாளர் சபைக்கும் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் ஏற்பட்ட இழப்புகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	ஆளுகைச் சபையின் அலட்சியம், கவனக்குறைவு மற்றும் தாமதம் ஆகியவற்றாலும் அந்த இழப்புகளை மீட்க முடியாதிருந்ததுடன் இடைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா. 6,294,099 இழப்பீடு செலுத்த வேண்டியிருந்தது.		
(ஆ)	நேரடி இருப்பு சரிபார்ப்பின் போது கண்டறியப்பட்ட, முன்னைய ஆண்டின் ரூபா. 6,687,842 பெறுமதியான இருப்புப் பற்றாக்குறைக்காக பொறுப்பான தரப்பினரைக் கண்டறியாமலும், அவர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்காமலும், பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி, செலவினமொன்றாக மீளாய்வாண்டின் மிகைக்கு எதிராகத் பதிவழிக்கப்பட்டன.	இது தொடர்பாக விரிவாக விசாரிக்க ஒரு பொருத்தமான சபை நியமிக்கப்பட உள்ளதுடன். அந்த சபைப் வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்புப் பற்றாக்குறைக்குக் காரணமாக பொறுப்பான தரப்பினரைக் கண்டறிந்து, அவர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	சபையின் ERP முறைமையை நிறுவுவதற்காக, 2024 யூலை 12 முதல் அமலுக்கு வரும் வகையிலும், 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட வேண்டிய வகையிலும் ஒரு கம்பனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன். அதற்காக ரூபா. 35,438,690 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2025 ஒக்டோபர் மாதம் வரையிலும் தொடர்புடைய திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை	ஒவ்வொரு மொடியுலையும் பூர்த்தி செய்ய திட்டமிடப் பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் நிர்வாகப் பிரிவின் சம்பளப் பகுதியை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர், விற்பனைப் பிரிவிற்குரிய பகுதியும் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் பின்னர் ஒவ்வொரு பிரிவிலும் செய்யப்பட்ட பல்வேறு திருத்தங்கள் காரணமாக, இந்தக் கணக்கீட்டு முறைமையை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இது தற்போது பரிசோதனை கட்டத்தில் உள்ளது.	ERP முறைமையை விரைவில் நிறுவுவி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக சபையால் 2013 ஆம் ஆண்டில் ரூபா. 200 மில்லியன் கடன் பிரதேச அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் அக்கடன்	RDB வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்களைத் தீர்ப்பது தொடர்பாக எதிர்காலத்தில் அந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடவும், தவணை செலுத்துதல்கள் குறித்த ஒரு	வங்கியுடன் கலந்துரையாடி கடன் மற்றும் வட்டி தொகையை செலுத்துவதற்கு பொருத்தமான வேலைத்

	தொகையைத் திருப்பிச் செலுத்துவது தவிர்க்கப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய வட்டியான ரூபா. 12,609,761, தொகை கடன்தொகையாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்தக் கடனைத் தீர்ப்பதற்கு வங்கியுடன் ஒரு பொருத்தமான திட்டமொன்றுக்கு வரவில்லை.	அடிப்படைத் திட்டத்தை வகுக்க எதிர்பார்த்துள்ள துடன் எதிர்காலத்தில் அந்தத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் .	திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா. 616,196,265 ஆக இருந்த இருப்பு பெறுமதியில், ரூபா. 93,593,747 பெறுமதியான பல ஆண்டுகளாக இருந்த அசையாச் இருப்புக்களும், விற்கப்பட்ட இருப்புக்களிலிருந்து நீக்கப்படாத பெறுமதிகளும் அடங்கியிருந்த போதிலும், அந்த மீதிகளைத் தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளதுடன் ,அக்குழுவின் தீர்மானங்களின் படி தேவையான சீராக்கங்கள் செய்யப்படும். Sala Global Village மற்றும் E Commerce இருப்பு 2025 கணக்காண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்பு பெறுமதியில் சேர்க்கப்பட்டு விற்கப்பட்ட இருப்புக்களில் இருந்து நீக்கப்படாத பெறுமதிகளை நீக்குவதற்கும், அசையாத இருப்புக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி செயல்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(இ)	தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள வெலிபன்ன சேவை வளாகத்தில் அமைந்துள்ள ஒரு கம்பனியிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட காட்சி அறை, 2022 திசெம்பர் 01 ஆந் திகதி மூடப்பட்டு குத்தகை யாளரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்ட போதிலும், செலுத்தப்பட்ட திரும்பப் பெறக்கூடிய வைப்புத் தொகையான ரூபா 3,496,857 ஐ மீளப் பெற்றுக் கொள்வதற்கும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காட்சியறையின் நிலுவை குத்தகை வாடகை மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களின் பெறுமதியான ரூபா. 10,500,862 தொகையினை தீர்வு செய்வதற்கும் மீளாய்வாண்டிலும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	எதிர்வரும் ஆண்டில் இது தொடரப்பாக ஆராய்ந்து பார்த்து சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை குத்தகை வாடகை மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களைச் செலுத்தி வைப்புத் தொகையினை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	எந்த ஒரு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படாமல் 2009 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ள கெசெல்வத்த செயற்திட்டத்திற்குச் சொந்தமான ரூபா 3,988,500 பெறுமதியான இயந்திரப் பொறிகள் மற்றும் கட்டிடம் பயனற்றுக் காணப்பட்டதுடன் அவற்றின் பராமரிப்பிற்காக ஆண்டின் போது ரூபா 1,077,386 தொகை செலவிடப்பட்டிருந்தது.	கெசெல்வத்த செயற்திட்டத்திற்குச் சொந்தமான இயந்திர உபகரணங்கள் பயனற்றுக் காணப்பட்ட போதும் இதன் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியுள்ளதுடன் மின்சாரக் கட்டணங்கள் மற்றும் நீர் கட்டணங்களை கொடுப்பனவு செய்யப்பட்டன.	காணப்படுகின்ற வளங் களில் உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான வேலைத்திட்ட மொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயற்பாட்டு செலவினத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கோட்டை விற்பனை கண்காட்சிக்கூட கட்டிடத்தில் 40,830 சதுர அடி அளவான கட்டிட பகுதி பழுதடைந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக நீண்ட காலம் முதல் பயனற்றுக் காணப்பட்டதுடன் நவீன மயப்படுத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	கோட்டை காட்சியறை கட்டிடத்தைப் புதுப்பிப்பதற்குப் பெருமளவில் செலவு மேற்கொள்ள நேர்வதுடன். அந்தச் செலவுகளை சபையால் ஏற்க இயலாததால், வெளித் தரப்பினரை ஒன்றிணைத்து, பொது தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் அதனை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கட்டிடத்தைப் புதுப்பித்து ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில், செயல்படாற்று உள்ள நூதனசாலை நடைமுறைக் கணக்கு உட்பட, நீண்ட காலமாகச் காணப்படும் ஏனைய 07 நடைமுறைக் கணக்குகளின் மொத்த மீதி ரூபா 779,173 ஆக இருந்த கணக்குகளை மூடி, உரிய நிதிகளை பொருத்தமான செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்படவில்லை.	செயற்பாடற்று காணப்படும் நு நடைமுறைக் கணக்கில் உள்ள பணத்தை பிரதான நடைமுறைக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அந் நடைமுறை கணக்குகளை எதிர் காலங்களில் ஆரம்பிக்கப்பட உள்ள கிளைகளுக்கு வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்படாத வங்கிக் கணக்குகளில் உள்ள மீதிகள், செயல்பாட்டில் உள்ள கணக்குகளுக்கு மாற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டுதல் கோவையின் 8.9.1(ஆ) ஆம் வழிகாட்டலின்	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை செயற்பாடுகளை	சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது பெறுகை

	பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் அல்லது சேவை ஒப்பந்தங் களுக்காக முறையான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா. 1,43,35,375 பெறுமதியான பாதுகாப்பு சேவைகள் ஒப்பந்தத்திற்கு 2025 ஜூன் 04 ஆந் திகதி வரை ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவில்லை. மேலும், அத்தகைய ஒப்பந்தம் ஏதுமின்றி 2025 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு ஒப்பந்ததாரருக்கு ரூபா. 23,50,406 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.	மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	வழிகாட்டல் கோவையின் பிரகாரம் உடன்படிக்கை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கை செய்யாமல் சேவைகளைப் பெற்றுக்கொண்ட மற்றும் கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தமொன்று வழங்கப்படும் போது மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையில் பத்து சதவீதத்திற்கு குறையாத செயலாற்றல் பிணை பாதுகாப்பொன்று வேலை பூர்த்தி செய்ய வேண்டிய திகதிக்கு அப்பால் 28 நாட்களுக்கு, செல்லு படியாகும் வகையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மனிதவள சேவைகளைப் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திட மிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய செயலாற்றல் பிணைத் தொகையில் ரூபா 897,052 தொகை குறைவாகவும் ஒப்பந்த இறுதித் திகதியில் இரத்தாகும் வகையில் செயலாற்றல் பிணை பாதுகாப்பு பெற்றுக் கொளளப்பட்டிருந்தது.	அடுத்து பெறுகை நடவடிக்கைளின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் உடன்படிக்கை செய்வதற்கு முன்னர் உரிய செயலாற்றல் பாதுகாப்பினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.